1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல்நிலைக் கல்விப் பாடத்திட்டத்தில் பாடச்சுமை அதிகமாக உள்ளதெனவும் அதனைக் குறைக்க வேண்டும் எனவும் ஆசிரியர் மற்றும் கல்வி வல்லுநர்களிடமிருந்து வேண்டுகோள் வரப்பெற்றதின் பேரில் பொதுக் கல்விப் பாடத் திட்டத்தின் பகுதி 3ன் பிரிவு "ஏ" யில் உள்ள 13 பாடங்களில் ஆங்காங்கு சில பகுதிகளை மட்டும் நீக்குவதற்காகப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளினின்று ஆசிரியர்கள்/பேராசிரியர்கள் ஆகியோர் அடங்கிய 11 குழுக்கள் அமைக்கப்பட்டு அக் குழுக்கள் ஆராய்நது முடிவாக அளித்த பரிந்துரைகளின் மீது உரிய பாடத் திட்டக் குழுத் தலைவர்களின் ஒப்புதலையும் கவனத்தில் கொண்டு மேற்படி மேல்நிலைக் கல்வி பாடத் திட்டத்தின் பொதுக் கல்வி பகுதி 3ன்பிரிவு'ஏ'யில் நீக்கப்பட்ட சில பகுதிகள் 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 18 ஆம் நாளிட்ட அரசாணை எண் 775ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நீக்கப்பட்ட பகுதிகள் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் இப்போது சோதனைக் கூடங்கள் இல்லை. ஆகவே அந்த மேல் நிலைப் பள்ளிகளுக்கு அருகாமையில் இருக்கின்ற கல்லூரிகளிலே உள்ள சோதனைக் கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால், மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் கல்லூரிகளிலே உள்ள சோதனைக் கூடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லாமல் தாங்களாகவே சோதனைத் தேர்வுக்கான மார்க்குகளைப் போடுவதாகக் கூறுகிறார்கள். அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை.

பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பு.

*வினா எண். 107— திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் டிப்ளமோ பெற்ற மாணவர்கள் நேரடியாக பி.இ. (பொறியியல்) படிக்க மூன்று வருட வேலை அனுபவச் சான்றிதழ் கேட்பதை நிறுத்திடும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அடுத்த கல்வியாண்டில் அதற்குரிய ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு மு. ஜான் வின்சென்ட் : தலைவர் அவர்களே, இந்தப் பொறியியல் டிப்ளமோ படித்தவர்கள் தாங்கள் பி. இ. பொறியியல் படிக்க வேண்டுமென்றால் மூன்று ஆண்டுகள் வேலை அனுபவ சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தச் சான்றிதழ் தேவை என்பதை நிறுத்தும் உத்தேசம் உண்டா? அதைப்பற்றி அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பொறியியல் டிப்ளமோ படித்தவர்கள் 3 ஆண்டுக் காலம் வேலை அனுபவத்தை வைத்துத்தான் பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அதிலே எந்த மாற்றமும் செய்வதற்கு இப்பொது உத்தேசம் இல்லை.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்குகளிலே பொறியியல் படித்த மாணவர்கள் இதற்கு முன்னாலே அவர்கள் அந்தப் படிப்பை படித்து முடித்தவுடனே நேரடியாக பி.இ. பட்டப் படிப்பில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். ஆனால், தற்போது 3 ஆண்டு அனுபவ சான்றிதழ் கோரப்படுகிறது. அப்படியின்றி பாலிடெக்னிக்குகளில் படித்து முடித்தவர்களை நேரடியாக பி. இ. படிப்பிற்குச் சேர்த்துக் கொள்ள அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த பாலிடெக்னிக் படித்தவர்கள் பட்டப் படிப்பிலே படிப்பதாக இருந்தாலும், வேறு எதற்காக இருந்தாலும், யூனிவர்சிட்டி போன்ற அமைப்புகள் முடிவு செய்யும். டெக்னிகல் எஜூகேஷன் போர்டு முடிவு செய்ய வேண்டும். ஆனால், இப்போது அந்த உத்தேசமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, மேல்நிலை வகுப்புகளில் தமிழ்நாடு முழுவதும் எத்தனை பேர்கள் படிக்கிறார்கள்? அந்த இடங்களை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதாவது அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்பொழுது என்னிடத்திலே அந்த விவரம் இல்லை. ஆனால், போன வருஷம், அதற்கு முந்தைய ஆண்டு இருந்ததைவிட, கொஞ்சம் இடங்களை அதிகரித்ததாக அறிகிறேன்.